

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து நேற்று (15.08.2024) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் கீழ்பவானி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து வைத்தார்கள்.உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், சட்டமன்ற உறுப்பினர்கள் (அந்தியூர்) ஏ.ஜி. வெங்கடாசலம், (மொடக்குறிச்சி) திருமதி.சி.சரஸ்வதி, (அரவக்குறிச்சி) ஆர்.இளங்கோ, ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.நவமணி கந்தசாமி உட்பட பலர் உள்ளனர்.



திருவேற்காடு ஸ்ரீ தேவி கருமாரியம்மன் திருக்கோவிலில் 78 வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்எல்ஏ முன்னிலையில் தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் சமத்துவ விருந்தை தொடங்கி வைத்து உணவு அருந்தி பெண் பக்தர்களுக்கு புடவை வழங்கினார். உடன் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், திருவேற்காடு நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், திருக்கோவில் இணை ஆணையர் அருணாச்சலம், மற்றும் வி.குமார், ப.ச.கமலேஷ், ஜி.ராஜேந்திரன், நாராயண பிரசாத், வழக்கறிஞர் பெ.வினோத் மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### பவானி சாகர் அணையிலிருந்து

# விவசாயிகள் நலனுக்காக 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது!

## அமைச்சர்கள் சு.முத்துசாமி - மு.பெ.சாமிநாதன் பேட்டி!

ஈரோடு, ஆக.16

ஈரோடு மாவட்டம், பவானி சாகர் அணையிருந்து விவசாய பாசனத்திற்காக 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது என்று பவானி சாகர் அணையை திறந்து வைத்து அமைச்சர்கள் .முத்துசாமி - மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

முதலமைச்சர் எல்.பி.பி. வாய்க்காலின் சீரமைப்பு பணிகளை கண்காணித்து இப்பணிகளை விரைந்து முடித்திடவும் ஆகஸ்ட் 15 அன்று தண்ணீர் திறக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் துரித நடவடிக்கை மேற்கொண்டு சீரமைப்பு பணிகளை முடித்து தண்ணீர் திறந்துவிடும் அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் முதல்போக பாசனத்திற்கு பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானித்திட்ட பிரதான கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மற்றும் சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் இரட்டைப்படை மதகுகளின் நன்செய் பாசனத்திற்கு 15.08.2024 முதல் 12.12.2024 முடிய 120 நாட்களுக்கு 23846.41 மி.க.அடிக்கு மிகாமல் தேவைக்கேற்ப தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி இன்றைய தினம் (15.08.2024) ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி திட்ட பிரதானக்கால்வாயில் ஒற்றைப் படை மதகுகளுக்கும் சென்னசமுத்திரம் பகிர்மானக் கால்வாயில் இரட்டைப்படை மதகுகளுக்கும் தற்போது அணையில் உள்ள நீர் இருப்பு வடகிழக்கு பருவமழை மூலம் எதிர்பார்க்கப்படும் நீர்வரத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கீழ்பவானித் திட்ட பிரதானக் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீரின் அளவு 200 கன அடி முதல் 2300 கனஅடி வரை படிப்படியாக உயர்த்தப்பட்டு 120 நாட்களுக்கு 23.846 டி.எம்.சி தண்ணீர் வழங்கப்படும். இதில் ஈரோடு மாவட்டத்தில் 91284 ஏக்கர் நிலங்களும் திருப்பூர் மாவட்டம் 10.228 ஏக்கர் நிலங்களும் கரூர் மாவட்டத்தில் 1988 ஏக்கர் நிலங்களும் என மொத்தம் 103500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அணையில் போதிய அளவு நீர் இருப்பு உள்ளது. மழையும் போதிய அளவு இருக்கிறது. எனவே இந்த தண்ணீர் விவசாயிகளுக்கு சரியான அளவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே போல் விவசாயிகளின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை நிறைவு செய்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர்கள் பேட்டியளித்தனர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஆக. 16 -

விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி நாளை (17.08.2024 சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளராகிய எனது (டாக்டர். பொன்.கௌதமசிகாமணி) தலைமையில் நடைபெறுகிறது.



விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர் - உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களும், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக் அவர்களும் சிறப்புரை ஆற்றுகிறார்கள். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் வரவேற்புரை ஆற்றுகிறார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.அன்பு, டி.டி.ஜெ.ராஜவேல், எஸ். பாலாஜி, ஏ.சி. கே.பிரேம், ப.கலைவாணன், ஏ.கே.தேவேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். போட்டியின் நடுவர்களாக ஆலந்தூர் ஒப்பிலாமணி, இந்திரகுமார் தேரடி, கலைஞர் டிவி உமா ஆகியோர் பங்கு பெறுகின்றனர். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா இலட்சுமணன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன் , மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செபுஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா. இளந்திரையன், இரா கற்பகம், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம். தேன்மொழி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ.மணிகண்டன் நன்றியுரையாற்றுகிறார். நிகழ்வில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வெளிநாடு வாழ் இந்தியர்கள் சங்கம் சார்பில் –பஹ்ரைனில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டம்

## சங்க அவைத் தலைவர் பால்ராஜ் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

மனாமா, ஆக. 16-

வளைகுடா நாடான பஹ்ரைன் நாட்டில், தலைநகர் மனாமாவில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டம். வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் அதன் அவைத் தலைவர் பால்ராஜ் தலைமையில் ஆக.9ந் தேதியன்று நடைபெற்றது.

தமிழ் தாய் வாழ்த்துப் பாடலுடன் கூட்டம் தொடங்கியது.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுவப் படத்தை பால்ராஜ் திறந்து வைக்க, துணைத் தலைவர் கருணாநிதி சண்முகம் மாலை இட்டு மரியாதை செலுத்தினார்.

நூற்றுக்கு மேற்பட்ட திமுகவினர் கலந்து கொண்டு தலைவர் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

“கலைஞரின் ஆளுமை திறன்” என்னும் தலைப்பில் கருணாநிதி சண்முகம் பேசுகையில், ஒவ்வொரு முறை திமுக ஆட்சிப் பொறுப்பிற்கு வரும் போதெல்லாம் தமிழர்களின் வாழ்வாதாரம் ஒரு படி முன்னேற்றம் அடைந்து கொண்டு தான் உள்ளது அதற்கு காரணம் தலைவர்.கலைஞர் அவர்களின் ஆளுமைத் திறனால் கொண்டு வரப்படும் திட்டங்கள் தான் என்று பேசினார்.

“விவசாயிகளின் தோழர் கலைஞர்” என்றத் தலைப்பில் சேகர் ராஜலிங்கம் பேசுகையில் எழைய எளிய விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்தவர் கலைஞர்,

இந்தியாவிலேயே முதல் முறையாக விவசாயத்திற்கு இலவச மின்சாரம் கொடுத்தவர், விவசாயிகளே தாங்கள் விளைவித்த காய்கறிகளை இடைத் தரகர்கள் இல்லாமல் விலை நிர்ணயம் செய்ய வைத்தவர் கலைஞர், நிலம் இல்லா எழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலத்தை இலவசமாக கொடுத்தவர் தலைவர் கலைஞர் என்று பேசினார்.

திராவிட ஆட்சிகளின் ஒப்பீடு என்னும் தலைப்பில் பேசிய குடந்தை ஆரிப், தி.மு.க வின் தொடங்க காலம் முதல் இந்த திராவிட மாடல் ஆட்சி வரை தி.மு.க சாதனைகள் எல்லாம். முந்திய ஆட்சியார்களை விட எவ்வாறு சிறப்பான திட்டங்களை உருவாக்கி அதை செயல்படுத்தி, நாட்டை வளர்ச்சிப் பாதையை நோக்கி அழைத்துச் சென்றுள்ளது என்று ஒப்பிட்டு பேசினார்.

“சிறுபான்மை பாதுகாவலர் கலைஞர்” என்னும் தலைப்பில் திருச்சி முபாரக் அலி பேசும் போது சிறுபான்மை மக்களின் நலனைப் பாதுகாக்கும் அரசாரக திமுக செயல்படுகிறது என்பதை பல்வேறு தரவுகளுடன் பேசினார்.

குறிப்பாக இன்று சட்டக் கல்லூரியில் அதிகமாக சிறுபான்மை மக்கள் படிக்க அதுவும் இஸ்லாமியப் பெண்கள் கூடுதல் படிக்க காரணம் தலைவர் கலைஞர் தான் என்று கூறினார்.

வல்லம் பசீர் பேசுகையில் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், கழகத்தின் கடைக் கோடித் தொண்டனுக்கும் இருந்த தொடர்பு பற்றி எடுத்துப் பேசினார்.

உடன்பிறப்புகள் கடிதம் என்பது வெறும் வாக்கியங்கள் மட்டும் நிறைந்த கடிதம் அல்ல, அது தலைமைக்கும் கடைசித் தொண்டமுக்கும் உள்ள உறவுப் பாலம் அது, என்று பேசினார்.

பெருவை பிரபா, சரபுதீன், தக்கலை சாம், தமிழரசன், ஆரூர் வெங்கட், செந்தில், மன்னை செல்வம், ஆழியூர் சாகுல், சுதாகர் மற்றும் மொய்தீன் ஆகியோர் தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றி பேசினார்கள்.

மேலப்பூந்தை இஸ்மாயில் வரவேற்க, சதீஷ் குமார் நன்றி கூற, துணைப் பொறுப்பாளர் சுல்தான் இப்ராஹிம் தொகுத்து வழங்கினார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுபடி, காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் கருவேப்பம்பூண்டி ஊராட்சியில் கிராமசபை கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர், மாவட்ட வருவாய் அலுவலர், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி. ஹேமலதா ஞானசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன் மற்றும் துணை தலைவர், வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்துகொண்டனர்..


# கண்ணீர் அஞ்சலி

சிவகங்கை மாவட்ட துணைச்செயலாளர்

திரு. K.S. மணிமுத்து அவர்கள்



15.08.2024 அன்று இயற்கை எய்தினார் என்பதினை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு : P. சசிக்குமார்பெரியசாமி

மாவட்ட துணை அமைப்பாளர் ஆதிதிராவிடர் நலக்குழு

மற்றும்

ஆதிதிராவிடர் நலக்குழு - திமுகழகத்தினர்

சிவகங்கை மாவட்டம்